# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் – 03.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அஃதர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 13308/SCIC/2023**

திரு K. ரவி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூதலூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே 12.05.2025 அன்று ஆணையத்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

- **மனுதாரர் கோரிய கோப்புகள் (எண்கள் 9480 மற்றும் 362) ஆகியவற்றை பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், பூதலூர் வட்டம் அவர்கள், வட்டாட்சியர் அலுவலகத்தில் மீண்டும் ஒருமுறை முழுமையான வகையில் தேடிக்கண்டுபிடிக்குமாறும், அவ்வாறு அக்கோப்பு கிடைக்கும்**

**பட்சத்தில், அதன் நகலை ஆணையத்திற்கு அடுத்த விசாரணையின்போது சமர்ப்பிக்க வேண்டுமென்றும், அவ்வாறு தேடியும் கண்டுபிடிக்க இயலவில்லையெனில், மேற்சொன்ன கோப்பு காணாமல் போனதற்கு காரணமான பொறுப்பாளி யார் என்பதை நிர்ணயம் செய்து, அன்னார் மீது துறை ரீதியிலான ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதோடு, அவர் மீது எடுத்த நடவடிக்கை குறித்த அறிக்கையினை அடுத்த விசாரணையின்போது ஆணையத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.**

- **இவ்வழக்கிற்கான அடுத்த விசாரணை 03.06.2025 தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது. அடுத்த விசாரணைக்கு மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பூதலூர் ஆகியோர்களுக்கு ஆணையத்திலிருந்து விசாரணை அழைப்பாணைகள் அனுப்பப்படவேண்டும். அடுத்த விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் கண்டிப்பாக நேரில் ஆஜராக வேண்டும்.**

2. அதனடிப்படையில் இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி K. சாந்தி, பொதுத் தகவல் அலுவலர் / தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், பூதலூர் நேரில் ஆஜரானார்.

4. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய கோப்பு எண்கள் 9480 மற்றும் 362 ஆகியவற்றை தங்கள் அலுவலகத்தில் முழுமையாகத் தேடிப்பார்த்தும் கிடைக்கப்பெறவில்லையென்றும், ஆதலால் மனுதாரர் கோரிய நகல்களை அவருக்கு வழங்க இயலவில்லையென்றும் விசாரணையின்போது தெரிவித்தார்.

5. **மேற்படி கோப்புகள் காணாமல் போனது தொடர்பாக தங்கள் அலுவலக ஊழியர்களுக்கு விளக்கம் கோரும் குறிப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அக்குறிப்பாணையின் நகலினை விசாரணையின்போது ஆணையத்தின் முன் பொதுத் தகவல் அலுவலர் சமர்ப்பித்தார். மேலும் ஒரு மாத கால அவகாசம் தனக்கு அளிக்கும்பட்சத்தில் மேற்குறிப்பிடப்பட்ட ஊழியர்களிடமிருந்து பெறப்படும் குறிப்பாணைகளுக்கான விளக்கங்களின் அடிப்படையில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையினை சமர்ப்பிப்பதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்தின் முன் கோரினார். அவரது கோரிக்கையினை ஆணையம் ஏற்கிறது.**

**6. எனவே, பொதுத் தகவல் அலுவலர் ஒரு மாத காலத்திற்குள் மேற்குறிப்பிட்டவாறு கோப்புகள் காணாமல் போனதற்கு பொறுப்பான அலுவலர் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை குறித்த விவரத்தினை 17.07.2025 பிற்பகல் அன்று ஆணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்ஃதர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 13308/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பூதலூர் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு கே. ரவி,
G-2, ஷா பிளாட்ஸ் பழைய எண்.28,
காலேஜ் ரோடு,
பழவந்தாங்கல்,
சென்னை 600 061

Copy to: File TK/PS